வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 03.01.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

மனநல சிகிச்சையுடன், பாரம்பரிய மருத்துவ முறைகளை ஒருங்கிணைப்பதில், பெங்களூர் NIMHANS மருத்துவமனையின் முயற்சிகளை, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு பாராட்டியுள்ளார்.

உலக அளவில் இந்தியாவின் நிலையை வலுப்படுத்தும் ஆண்டாக, நடப்பு 2025-ஆம் ஆண்டு, திகழும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

45 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் கண் பரிசோதனை மற்றும் முழு உடல் பரிசோதனை செய்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் வலியுறுத்தி உள்ளார்.

Scrub Typhus பாக்டீரியா காய்ச்சல் குறித்து, மக்கள் பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என, புதுச்சேரி அரசின் சுகாதாரத் துறை, அறிவுறுத்தி உள்ளது.

முர்மு

மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியில் துறையில் பெங்களூர் NIMHANS ஆற்றி வரும் பாராட்டத் தகுந்த பணிகளுக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார். இன்று பெங்களூரில் NIMHANS மருத்துவமனையின் பொன்விழா கொண்டாட்டங்களில் உரையாற்றிய அவர் உலக அளவில் முன்னணி மனநல மருத்துவமனையாக NIMHANS திகழ்வதாக கூறினார்.

மனநல பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, முன்பு சமுதாயத்தில் அவப் பெயர் இருந்த நிலையில், தற்போது இவர்கள்

தரமான சிகிச்சை பெறும் வாய்ப்பை, NIMHANS ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாகவும், இம்மருத்துவமனையின் டெலி-மனஸ் தொலை நிலை சேவையால், நாட்டின் மூலை முடுக்குகளிலும், மனநல பிரச்சனைகளுக்கு சிகிச்சை கிடைப்பதாகவும் குடியரசு தலைவர் தெரிவித்தார். மருத்துவ சேவையில் யோகா, ஆயுர்வேதம் உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவ முறைகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளிலும், NIMHANS சிறந்த முறையில் செயல்பட்டு வருவதாக அவர் பாராட்டினார். கொரோனா காலத்தில் வயதானவர்கள் மற்றும் பெண்களுக்கு தனிமையால் ஏற்பட்ட மன இறுக்கத்திற்கும், NIMHANS, சிறந்த முறையில் சிகிச்சை அளித்திருப்பதாக அவர் கூறினார்.

மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜேபி நட்டா, இவ்விழாவில் பேசுகையில் மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியில் துறையில் தரமான கல்வி வசதிகளையும் NIMHANS வழங்குவதாக தெரிவித்தார்.

கர்நாடக முதலமைச்சர் திரு சித்தராமையா நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு பி சி மோகன், திரு தேஜஸ்வி சூர்யா உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

விழாவின் போது பெங்களூர் NIMHANS மனநல மருத்துவமனையின் புதிய உயர் சிகிச்சைப் பிரிவு, ஆய்வுக் கூட வளாகம், மாணவர் விடுதி மற்றும் இதர நவீன வசதிகளையும் குடியரசு தலைவர், நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்.

மோடி-டெல்லி

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று டெல்லியில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். டெல்லி துவாரகா நகரில் கட்டப்பட்டுள்ள, மத்திய இடை நிலை கல்வி வாரியத்தின் ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் உள்ளிட்ட வசதிகளும், அரசு ஊழியர்களுக்கான சரோஜினி நகர் குடியிருப்பு, நவ்ரோஜி நகர் உலக வர்த்தக மையம் ஆகிய 2 நகர்புற மறுமேம்பாட்டுத் திட்டங்களும், இன்று பிரதமர் தொடக்கி வைத்த திட்டங்களில் அடங்கும். ரோஷன்புரா பகுதியில் வீர் சாவர்கர் கல்லூரி அமைக்கும் பணிகளுக்கும், 600 கோடி ரூபாய் மதிப்பிலான டெல்லி பல்கலைக்கழகத்தின் 3 புதிய திட்டங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

தலைநகரின் அசோக் விகார் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆயிரத்து 700 அடுக்குமாடி குடியிருப்புகளை, பிரதமர் பயனாளிகளுக்கு வழங்கினார். குடியிருப்புகளை அவர் சுற்றிப் பார்த்து பயனாளிகளுடன் கலந்துரையாடினார்.

நகர்புற சேரிகளில் வசிக்கும் மக்களுக்கு, அந்த இடத்திலேயே அடுக்குமாடி வீடுகளைக் கட்டித்தர, இயக்கம் ஒன்றை அரசு, தொடக்கி இருப்பதை பிரதமர் தமது உரையில் சுட்டிக்காட்டினார். அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத் தன்மையின் சின்னமாகவே இந்தியா மேம்பட்டுள்ளதாகவும், நடப்பு 2025-ஆம் ஆண்டு, உலக அளவில் இந்தியாவின் நிலையை வலுப்படுத்தும் ஆண்டாக திகழும் என்றும், அவர் கூறினார். உலகின் 3-ஆவது பெரிய பொருளாதாரமாக மேம்படுவதற்கான இந்தியாவின் பயணத்தில் இவ்வாண்டு உத்வேகம் அதிகரிக்கும் என்றும், உலகின் மிகப் பெரிய உற்பத்தி கேந்திரமாக இந்தியா மேம்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

மோடி-அஞ்சலி

வீரமங்கை வேலு நாச்சியார் பிறந்த நாளான இன்று, பிரதமர் திரு நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். காலனி ஆட்சிக்கு எதிரான போரில், இணையற்ற வீரத்தையும், அற்புதமான போர்த் தந்திரங்களையும் வெளிப்படுத்தியவர் வேலு நாச்சியார் என்று சமூக ஊடகப் பதிவில் பிரதமர் கூறி உள்ளார். ஒடுக்குதலுக்கு எதிரான போராட்டத்திலும் மகளிர் அதிகாரப் பங்கேற்பின் மேம்பாட்டிலும் வேலு நாச்சியார் பல தலைமுறைகளுக்கு ஊக்கமளித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சமூக சீர்திருத்தவாதி சாவித்ரிபாய் ஃபுலே பிறந்த நாளான இன்று, பிரதமர் திரு நரேந்திர மோடி, அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். பெண் கல்வி மற்றும் சமூக சீர்திருத்தப் பணிகளின் முன்னோடியான மகளிர் அதிகாரப் பங்கேற்பின் சுடராக திகழ்ந்தவர் என்று சமூக ஊடகப் பதிவில் பிரதமர் கூறி உள்ளார்.

கண் மருத்துவம்

45 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் கண் பரிசோதனை மற்றும் முழு உடல் பரிசோதனை செய்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் வலியுறுத்தி

உள்ளார். இன்று புதுச்சேரியில் கணக்கு மற்றும் கருவூலத்துறை இயக்குநரகத்தில் நடைபெற்ற கண் பரிசோதனை முகாமை தொடக்கி வைத்துப் பேசிய அவர், குறிப்பாக நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் கண் பரிசோதனை செய்து கொள்ளுதல் மிக அவசியம் என்றார். தலைமை கணக்கு தணிக்கை அலுவலகத்தின் தமிழ்நாடு-புதுச்சேரி கிளை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இம்முகாமில், கணக்கு கரூவூலத் துறை இயக்குநரகத்தில் பணி புரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் சுமார் 200 பேருக்கு. கண் பரிசோதனை செய்யப்பட்டது.

*மரம் நடும் விழா*

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா கட்டிட வளாகத்தில் இன்று நடைபெற்ற மரம் நடும் விழாவை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், மரக் கன்று நட்டுத் தொடக்கி வைத்தார். பல்கலைக் கழகத்தின் பொறுப்பு துணை வேந்தர் டாக்டர் தரணிக்கரசு, சட்டமன்ற உறுப்பினர் திரு கல்யாண சுந்தரம், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

*காய்ச்சல்*

Tick mite என்னும் ஒரு வகை ஒட்டுண்ணி கடியால் ஏற்படும் Scrub Typhus பாக்டீரியா காய்ச்சல் குறித்து புதுச்சேரி சுகாதாரத் துறை, விழிப்புணர்வு தகவல்களை பகிர்ந்து கொண்டுள்ளது. தொற்றுக்குள்ளான ஒட்டுண்ணி கடித்தால் மட்டுமே, இந்நோய் மனிதர்களுக்கு பரவும் என்றும், மனிதர்களிடம் இருந்து மனிதர்களுக்கு பரவாது என்றும் விழிப்புணர்வு பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அதேசமயம் ஒட்டுண்ணி கடியினால் பூனை நாய் போன்ற செல்லப் பிராணிகளுக்கும், செல்லப் பிராணிகள் மூலமாக மனிதர்களுக்கும் இந்நோய் பரவக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. Scrub Typhus பாக்டீரியா காய்ச்சல் குறித்து, கூடுதல் விழிப்புணர்வு தகவல்கள்..........

Scrub Typhus நோய்க்கு காரணமான ஒட்டுண்ணி கடித்த 14 நாட்களில், காய்ச்சல், குளிர் நடுக்கம், உடல் சோர்வு, உடல்வலி, இருமல் உள்ளிட்ட அறிகுறிகள் ஏற்படும். இந்த அறிகுறிகளை கவனிக்காமல் விட்டுவிட்டால்

2-ஆவது வாரத்தில் நுரையீரல் தொற்று, நிமோனியா, திடீர் சுவாசப் பிரச்சனை, மஞ்சள் காமாலை மற்றும் மூளைக் காய்ச்சல் ஏற்படலாம். நோய் முற்றிய நிலையில் கல்லீரல், சிறுநீரகம் போன்ற முக்கிய உறுப்புகள் பாதிக்கப்பட்டு, மரணம் அடையும் வாய்ப்பு 30 சதவிகிதம் வரை உள்ளது.

உண்ணி கடித்த இடத்தில், சிகரெட்டை வைத்து சுட்டது போல, கருப்பு நிறத்தில், உலர்ந்த, நீள்வட்டப் புண் ஏற்படும். இத்தகைய புண்ணுடன் காய்ச்சல் அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும். இது பேக்டிரியா தொற்று என்பதால், வழக்கமான ஆண்டிபயாடிக் மருத்துகள் மூலமாகவே இந்நோயை முழுமையாக குணப்படுத்த முடியும் என்றும், சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. வீட்டை சுற்றி உள்ள புதர்களை அகற்றி, ஒட்டுண்ணிக் கடியில் இருந்து பாதுகாத்துக் கொள்வதன் மூலமாகவே Scrub Typhus தவிர்த்து விட முடியும் என்றும் புதுச்சேரி சுகாதாரத் துறையின் விழிப்புணர்வு பதிவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு

புதுச்சேரி மாநில நுகர்வோர் குறை தீர்ப்பு ஆணையம், நூற்றுக் கணக்கிலான நுகர்வோர் வழக்குகளுக்கு தீர்வு கண்டு, நாட்டிற்கே எடுத்துக் காட்டாக செயல்பட்டு வருவதாக சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம் கூறி உள்ளார். 2019-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் குறித்து, மத்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகமும், டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரியும் இணைந்து புதுச்சேரியில் ஏற்பாடு செய்துள்ள, 3 நாள் திறன் மேம்பாட்டு பயிற்சியின் தொடக்க விழாவில் இன்று அவர் உரையாற்றினார்………

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பற்றிய திறன் மேம்பாட்டு பயிற்சி முகாமின் தொடக்க விழாவில் மாநில சட்டத் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் பேசுகையில் தற்போது நுகர்வோர் நீதிமன்றங்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதாலும் இந்நீதிமன்றங்கள் துடிப்பான முறையில் செயல்படுவதாலும், நுகர்வோருக்கு, அதிக செலவின்றி உடனுக்குடன் நிவாரணம் கிடைப்பதாக கூறினார். 1986-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் நடப்பு தேவைகளுக்கு ஏற்றபடியான திருத்தங்களை

தற்போது மத்திய அரசு கொண்டு வந்திருப்பது சிறப்பானது என்றும் அவர் குறிப்பிட்டார். டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் ஸ்ரீனிவாசன், போபால் தேசிய சட்ட பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் விஜயகுமார், சட்டமன்ற உறுப்பினர் திரு கல்யாண சுந்தரம் உள்ளிட்டோர் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு, ஆந்திரா, தெலங்கானா, புதுச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் உள்ள, மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் குறை தீர்ப்பு ஆணையங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு, இந்த 3 நாள் முகாமில், திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப் படுகிறது.

*ே□ாகா விழா*

புதுச்சேரியில், சுற்றுலாத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 30-ஆவது சர்வதேச யோகா விழாவை, நாளை மாலை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைக்கிறார். பழைய துறைமுக வளாகத்தின் மாநாட்டுக் கூடத்தில் நடைபெற உள்ள தொடக்க விழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், சுற்றுலாத் துறை அமைச்சர் திரு லட்சுமிநாராயணன் உள்ளிட்டோர் கலந்து கொள்கிறார்கள். புதுச்சேரி அரசின் 30-ஆவது யோகா விழா, நாளை முதல், வரும் 7-ஆம் தேதி வரை, 4 நாட்களுக்கு நடைபெறும்.

*காரைக்கால்*

காரைக்காலில், உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு, கோவில் பத்து, அரசு உயர்நிலைப் பள்ளியில் இன்று நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளை முதன்மை கல்வி அதிகாரி திரு விஜய மோகனா தொடக்கி வைத்தார். பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி மற்றும் ஓவியப் போட்டியில் சுமார் 400 மாற்றுத் திறனாளிகள் மற்றும் மாற்றுத் திறனாளி மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் வெற்றி பெற்றவர்களுக்கு, வரும் வாரத்தில் உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று, பரிசுகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பதவி ஏற்பு

மத்திய அரசின் முன்னாள் உள்துறை செயலர் திரு ஏ கே பல்லா, மணிப்பூர் மாநிலத்தின் புதிய ஆளுநராக இன்று பதவி ஏற்றுள்ளார். இம்ஃபால் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில் மணிப்பூர் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி திரு. கிருஷ்ணகுமார், புதிய ஆளுநருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். மாநில முதலமைச்சர் திரு பீரேன் சிங், அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், விழாவில் கலந்து கொண்டனர்.

ஒடிசா மாநிலத்தின் புதிய ஆளுநராக டாக்டர் ஹரிபாபு கம்பம்பதி இன்று பதவி ஏற்றுள்ளார். புவனேஸ்வர் ராஜ்பவனில் நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில், ஒடிசா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி திரு சந்திரஹரி சிங், புதிய ஆளுநருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். மாநில முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி, சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் திரு நவீன் பட்நாயக் உட்பட பலர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

வந்தே பாரத்

வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில், கடந்த 3 நாட்களாக நடைபெற்ற பல்வேறு சோதனை ஓட்டங்களில், மணிக்கு 180 கிலோமீட்டர் வேகத்தை எட்டி உள்ளது. கோட்டா ரயில்வே கோட்டத்தில் நடைபெற்ற வெற்றிகரமான பரிசோதனை ஓட்டம் பற்றிய வீடியோ ஒன்றை, ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். சோதனை ஓட்டங்கள் இம்மாத இறுதி வரை தொடர உள்ளன. தற்போது நாட்டின் 136 வந்தே பாரத் ரயில்களில், உலகத் தரம் வாய்ந்த பயண அனுபவத்தை, பயணிகள் பெற்று வருவதும், வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில்களில், தானியங்கி கதவுகள், அதி சவுகரியமான படுக்கைகள், வை-ஃபை இணைய இணைப்பு, விமானம் போன்ற வடிவமைப்பு போன்ற பல்வேறு வசதிகள் இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

மனநல சிகிச்சையுடன், பாரம்பரிய மருத்துவ முறைகளை ஒருங்கிணைப்பதில், பெங்களுர் NIMHANS மருத்துவமனையின் முயற்சிகளை, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு பாராட்டியுள்ளார்.

உலக அளவில் இந்தியாவின் நிலையை வலுப்படுத்தும் ஆண்டாக, நடப்பு 2025-ஆம் ஆண்டு, திகழும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

45 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் கண் பரிசோதனை மற்றும் முழு உடல் பரிசோதனை செய்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் வலியுறுத்தி உள்ளார்.

------------------------------